# பாரத ஜனங்களின் தற்கால நிலைமை 2



நெஞ்சு பொறுக்கு தில்லையே - இந்த
நிலைகெட்ட மனிதரை நினைத்துவிட்டால்.
அஞ்சி யஞ்சிச் சாவார் - இவர்
அஞ்சாத பொருளில்லை அவனியிலே;
வஞ்சனைப்பேய்கள் என்பார் - இந்த
மரத்தில் என்பார்; அந்தக் குளத்தில் என்பார்;
துஞ்சுது முகட்டில் என்பார் - மிகத்
துயர்ப்படுவார்; எண்ணிப் பயப்படுவார்.
(நெஞ்சு)

சிப்பாயைக் கண்டு அஞ்சுவார் - ஊர்ச்
சேவகன் வருதல்கண்டு மனம்பதைப்பார்;
துப்பாக்கி கொண்டு ஒருவன் - வெகு
தூரத்தில் வரக்கண்டு வீட்டிலொளிப்பார்;
அப்பால் எவனோ செல்வான் - அவன்
ஆடையைக் கண்டுபயந் தெழுந்து நிற்பார்;
எப்போதும் கைகட்டுவார் - இவர்
யாரிடத்தும் பூனைகள் போல் ஏங்கிநடப்பார்
(நெஞ்சு)

சாத்திரங்கள் ஒன்றும் காணார் - பொய்ச்
சாத்திரப் பேய்கள் சொல்லும் வார்த்தை நம்பியே
கோத்திரம் ஒன்றா யிருந்தாலும் - ஒரு
கொள்கையிற் பிரிந்தவனைக் குலைத்திகழ் வார்;
தோத்திரங்கள் சொல்லி அவர்தாம் - தமையச்
சூதுசெய்யும் நீசர்களைப் பணிந்திடுவார்;
ஆத்திரங் கொண்டே இவன் சைவன் - இவன்
அரிபக்தன் என்று பெருஞ் சண்டையிடுவார்.
(நெஞ்சு)


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

நெஞ்சு பொறுக்கு தில்லையே - இதை
　　நினைந்து நினைந்திடினும் வெறுக்குதிலையே;
கஞ்சி குடிப்பதற்கி லார் - அதன்
　　காரணங்கள் இவையென்னும் அறிவுமிலார்
பஞ்சமோ பஞ்சம் என்றே - நிதம்
　　பரிதவித்தே உயிர் துடிதுடித்துத்
துஞ்சி மடிகின்றாரே - இவர்
　　துயர்களைத் தீர்க்கவோர் வழியிலையே.



(நெஞ்சு)

எண்ணிலா நோயுடையார் - இவர்
　　எழுந்து நடப்பதற்கும் வலிமையிலார்
கண்ணிலாக் குழந்தை கள்போல் - பிறர்
　　காட்டிய வழியிற்சென்று மாட்டிக் கொள்வார்;
நண்ணிய பெருங்கலைகள் - பத்து
　　நாலாயிரங் கோடி நயந்து நின்ற
புண்ணிய நாட்டினிலே - இவர்
　　பொறியற்ற விலங்குகள் போல வாழ்வார்.

(நெஞ்சு)



**மகாகவி சுப்பிரமணிய பாரதியார்**

## அரும்பதங்கள்

| | | |
|---|---|---|
| அஞ்சுதல் | - | பயப்படுதல் |
| வஞ்சனை | - | கபடம் |
| துஞ்சுதல் | - | நித்திரை செய்தல் |
| முகடு | - | உச்சி |
| குலைத்திகழ்தல் | - | கெடுத்துத் தூற்றுதல் |
| சூது | - | கெடுக்கும் தந்திரம் |
| நீசர்கள் | - | இழிந்தவர்கள் |
| சைவன் | - | சிவபக்தன் |
| அரிபக்தன் | - | விஷ்ணு பக்தன் |

## கிரகித்தற் பயிற்சி

1. இக்கவிதையை எழுதிய கவிஞர் யார்?
2. பாரத மக்கள் எவற்றைக் கண்டு அஞ்சுவதாகக் கவிஞர் பாடுகிறார்?
3. சாத்திரப் பேய்களை நம்பும் மக்கள் யாரைப் பணிந்திடுவதாகக் கவிதையில் கூறப்பட்டுள்ளது?
4. மக்களின் இழிந்த நிலைகள் இக்கவிதையில் எவ்வெவ் வகைகளில் காட்டப்பட்டுள்ளன?
5. 'கஞ்சி குடிப்பதற்கிலார் அதன் காரணங்கள் இவையென்னும் அறிவுமிலார்' என்பதிலிருந்து நீங்கள் விளங்கிக்கொள்வது யாது?

## மொழித்திறன் விருத்திச் செயற்பாடுக

செயற்பாடு 1 : குழுவாகச் செயற்பட்டு பாடத்தில் வரும் பாடல்களைப் பாவோதல் முறையில் ஓதுக.

செயற்பாடு 2 : பின்வரும் வாசிப்புப் பொறிமுறைகளை அனுசரித்துக் கவிதையை வாசிக்குக.

அ. எழுத்துக்களின் ஒலிபேதங்களை இனங்காணல்.
ஆ. சொற்களைத் தொகுதி சேர்த்தல், பிரித்தல்
இ. தெளிவாக உச்சரித்தல்.
ஈ. சொற்கள், எழுத்துக்களுக்கு உரிய அழுத்தங்கள் கொடுத்தல்.
உ. மெய்ப்பாடுகளை வெளிப்படுத்தல்.
ஊ. எடுத்தல், படுத்தல், நலிதல், வேறுபாடுகளைக் கொடுத்தல்.
எ. நிறுத்தற்குறிகளை அனுசரித்தல்.

செயற்பாடு 3 : இக்கவிதை கூறும் கருத்துக்களைத் தொகுத்துக் கூறுக.

செயற்பாடு 4 : இக்கவிதையை மனனஞ்செய்து கூறுக.

செயற்பாடு 5 : பாரத ஜனங்கள் பற்றிக் கூறப்பட்ட கருத்துக்கள் நமது நாட்டு மக்களுக்குப் பொருந்துகிறதா என்பதைக் குழுவாகச் செயற்பட்டுக் கலந்துரையாடுக.

செயற்பாடு 6 : கவிதையின் முதற்பகுதியின் பொருளை உமது நடையில் எழுதுக.

செயற்பாடு 7 : இக்கவிதையை எழுதிய மஹாகவி சுப்பிரமணிய பாரதியாரின் வாழ்க்கை வரலாற்றை அறிந்து ஒப்படை தயாரித்துக் காட்சிப்படுத்துக.

# மொழிவளம்

## ▶ எதிர்க் கருத்துச் சொற்கள்

பின்வரும் தொடர்களைக் கவனிப்போம்

★ காசீம் இன்று வரவில்லை.
★ நாய் கட்டிலுக்குக் கீழ் உறங்குகிறது.
★ தயாளன் நாயைக் கண்டதும் அச்சமடைந்தான்.
★ சரிதா கனவு கண்டு அழுதாள்.

இந்த வாக்கியங்களில் இடம் பெறும் இன்று, கீழ், அச்சம், கனவு ஆகிய சொற்கள் பின்வரும் எதிர்க் கருத்துச் சொற்களைக் கொண்டுள்ளன.

★ இன்று - சந்திர காந்தி நாளை வரமாட்டாள்.
★ கீழ் - பூனை கட்டிலுக்கு மேல் உறங்குகிறது.
★ அச்சம் - இரசிதா துணிவு நிறைந்தவள்.
★ கனவு - பிரதீப் நனவு உலகில் வாழ்பவன்.

இவ்வாறு ஒரு சொல்லுக்கு எதிர்ப் பொருளைத் தரும் சொற்களை எதிர்க்கருத்துச் சொற்கள் என்போம். எதிர்க் கருத்துச் சொற்களை அறிந்து கொள்வதன் மூலம் மொழியாற்றலை வளர்த்துக் கொள்வோம்.

| | | | |
|---|---|---|---|
| 1. | அமிலம் உள்ள உணவுகளைத் தவிர்ப்போம். | - | காரம் |
| 2. | மாணவர்கள் ஆசையோடு படித்தனர். | - | நிராசை |
| 3. | இரகசியம் காப்பது நமது கடமை. | - | பரகசியம் |
| 4. | ஈரமான ஆடைகளை வெய்யிலில் போட்டேன். | - | உலர்ந்த |
| 5 | சூரிய உதயம் அழகானது. | - | மறைவு |
| 6. | மாணவர்கள் உற்சாகம் அடைந்தனர். | - | சோர்வு |
| 7. | ஒற்றுமை உயர்வைத் தரும். | - | வேற்றுமை |
| 8. | போலிகளைக் கண்டு ஏமாறக் கூடாது. | - | அசல் |
| 9. | இசையின் இன்பம் நிகரற்றது. | - | துன்பம் |
| 10. | ஓட்டப் போட்டியில் கலா வெற்றி பெற்றாள். | - | தோல்வி |

# இலக்கணம்

## தனி வாக்கியம்

பின்வரும் வாக்கியங்களை அவதானிப்போம்.

1. தம்பி தமிழ்த் தினப்போட்டியில் பரிசு பெற்றான்.
2. கிளி கூட்டில் வாழ்கிறது.

இவ்விரண்டு வாக்கியங்களும் தெளிவானதொரு கருத்தை வெளிப்படுத்துகின்றன. இவ் வாக்கியங்கள் ஒரு எழுவாயையும் ஒரு பயனிலையையும் பெற்று முடிவதனைக் காணமுடிகிறது.

தமிழ்த் தினப் போட்டியில் 'யார் பரிசு பெற்றார்?' என்று வினாவினால் 'தம்பி' என்ற விடை கிடைக்கும். ஆகவே இந்த வாக்கியத்தின் எழுவாய் தம்பியாகும். தம்பி என்ற எழுவாய் 'பெற்றான்' என்ற பயனிலையுடன் முற்றுப் பெறுகிறது. இதனைப் போலவே இரண்டாவது வாக்கியம் ஒரு எழுவாயைக் கொண்டு ஒரு பயனிலையுடன் முற்றுப் பெற்றுள்ளது.
இவ்வாறு ஒரு எழுவாயையும் ஒரு பயனிலையையும் கொண்டமையும் வாக்கியங்கள் தனிவாக்கியம் என்பர்.

- ★ மாணவர்கள் உணவு உண்டனர்.
- ★ திருவள்ளுவர் அறம் பற்றி பாடியுள்ளார்.
- ★ நிர்மலா தன் பெற்றோர்களுடன் வந்திருந்தாள்.

இவ்வாறு வரும் வாக்கியங்களைத் தனிவாக்கியம் என்பர்.

## பயிற்சி

★ **பொருத்தமான சொற்களைக்கொண்டு இடைவெளிகளை நிரப்பித் தனிவாக்கியங்களை அமைப்போம்.**
**(எழுதினேன், நாங்கள், பறந்தது, நான், காற்றில், பாடினார், இனிமையாக, பாடுவோம்)**

1. ............................. பாடசாலைக்குச் செல்வேன்.
2. காகம் குருவிகளோடு .................................
3. மரம் .................. அசைகிறது.
4. அம்மா ........................ பாடுவாள்.
5. ............................ கூடி விளையாடுவோம்.
6. கம்பர் இராமாயணத்தை ...........................
7. நாங்கள் சேர்ந்து ...............................
8. நான் எங்கள் பாடசாலையைப் பற்றி .........................

★ **பின்வரும் வினைச் சொற்களை வைத்துத் தனிவாக்கியங்களை அமைக்குக.**

1. எழுதினேன்
2. கண்டனர்
3. சொன்னான்
4. பறந்தன


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக